திரு-கொ. உழவர்கள் குடியேற்றம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆனிமீ 26உ	சனி (10—7—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆனிமீ 27உ	ஞாயிறு (11—7—54)	இதழ்: 23

போபால் விவசாயப் பண்ணையில் பாடுபடவாம்!

100 நிலமற்ற குடும்பங்களை கடத்த திட்டம்!

ஆகஸ்ட் துவக்கத்தில் 'பொறுக்கல்' முடிவுறுமாம்!

புதுடெல்லி, ஜூலை 9—

போபால் மாநிலத்தில், கல்நான்பூர் என்ற இடத்தில், இயந்திரங்களின் உதவியால் நடத்தப்பட்டுவரும், யூனியன் சர்க்கார் விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது.

அங்கு குடியேறி, பயிர் வேலை செய்வதற்காக, திருவாங்கூர்-கோச்சியிலிருந்து 100 உழவர் குடும்பங்களை அழைத்துச் செல்லுவதென யூனியன் சர்க்கார் முடிவுகட்டி இருக்கிறது.

யூனியன் விவசாய மந்திரி தலைமையில், ஜம்மு காஷ்மீர், போபால் விவசாயப் பண்ணை தொழிலாளர் நிர்வாக அமைப்புகள் நடத்திய கூட்டமொன்றில், மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

திருவாங்கூரில் இருந்து கொண்டு செல்லப்படும் குடியானவர்களோடு, போபால் குடியானவர்கள், அப்பண்ணையில் பணி புரிவர் எனத் தெரியவருகிறது.

உழவர்களைப் பொறுக்கும் பணி, ஆகஸ்டு துவக்கத்திற்குள் முடிவுறும் என்றும் சொல்லப்படுகிறது.

'சோதிடம் நமக்குத் துணை செய்யாது!'

'அறிவுள்ளவர்களும் அதை நம்புவது வேதனை தருகிறது!'

'உழைப்பு ஒன்றே விமோசனமளிக்கும்!'

"பொறுப்புள்ள பதவிகளில் இருக்கும் சில அறிவுள்ளவர்களிடையேகூட, தங்களுடைய எதிர்காலத்தைத் தெரிந்து கொள்வதற்காக, மேலும் மேலும் சோதிடத்தில் நம்பிக்கை வைப்பது தீவிரமாகப் பரவி வருகிறது. இது கண்டு நான் வருந்துகிறேன். முதல்தரமான மூட நம்பிக்கையாகும் இது! பிறந்த நட்சத்திரத்தை நோக்குவதும், அவைகளில் நம்பிக்கை வைத்து வாழ முற்படுவதும் நமக்கு உதவி செய்யாது. நாம் கஷ்டப்பட்டு பாடு பட வேண்டும்; நம்மையே நம்பி வாழ முனைய வேண்டும்.', இவ்வாறு பண்டித நேரு நங்கல் பொதுக்கூட்டமொன்றில் தேசம் பொழுது குறிப்பிட்டார்.

சிலம்பும் சிந்தாமணியும் இருக்க கம்பன் காவியம் போற்றப்படுவதேன்?

குடி வழி கோலோச்சினர் நம்மவர்!

மன்னன் வழி நாடு என்பது வடவர் கொள்கை!

கம்ப ராமாயணம் பற்றி நெடுஞ்செழியன்

கம்ப ராமாயணம் நறுமணம் பரப்பும் பூஞ்சோலை போலவும், அங்கே நல்ல பல மலர்கள் இருப்பதுடன் நாட்டின் நலிவுகளைப் போக்க மருந்தும் கிடைப்பதுபோலவும் இன்று மலர் பேச முனைந்திருப்பவர்களைச் சுட்டிக் காட்டி, "கம்ப ராமாயணம்?" என்ற தலைப்பில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 8-7-54 அன்று, சென்னை மெமோரியல் மண்டபத்தில் நிகழ்த்திய அரியதோர் இலக்கியச் சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. அச்சொற்பொழிவின் பிற்பகுதி இன்று தரப்படுகிறது:—

உங்களை, நான், இந்த கம்ப ராமாயணம் பற்றிப் பேசுவதற்கு முன்னால் ஒன்றைச் சிந்திக்க வேண்டுகிறேன். இந்தக் கம்பராமாயணத்திற்கு மட்டும் இந்த நாட்டிலே இவ்வளவு செல்வாக்கு ஏன்? அதுமட்டும்தான் இந்த நாட்டிலே இலக்கியமாக இருக்கிறதா? வேறு இலக்கியங்களே இல்லையா?

தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் இல்லாத செல்வாக்கு, சிலம்புக்கும் மணிமேகலைக்கும் கிடைக்காத செல்வாக்கு, புறநானூற்றிற்கும் அகநானூற்றிற்கும் இல்லாத ஆதரவு, பதிற்றுப்பத்திற்கும், பரிபாடலுக்கும் பத்துப் பாட்டு எட்டுத் தொகை, குறுந் தொகை, நற்றிணை இவற்றிற்கெல்லாம் இல்லாத செல்வாக்கும், பிரசாரமும் இந்த கம்ப ராமாயணத்திற்கு மட்டும் கிடைப்பானேன்?—சிந்தியுங்கள் சற்று!

காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வு முறையையும் அழகுறக் கூறும் 'பட்டினப்பாலை' ஏன் மக்களுக்குத் தெரிவதில்லை?

சங்க காலத்தில்—மக்களிடை மதம் இடம் பெறாத காலத்தில், 'வாழ்வு வாழ்வதற்கே,' எனும் உயரிய வாழ்க்கை முறை நிலை பெற்றிருந்த காலத்தின் நாகரிக வளம் காட்டும் இலக்கியங்கள் எல்லாம் மக்கள் மன்றத்தில் உலவவில்லையே, இன்று—காரணம் என்ன?

சங்க காலத்திய தமிழ் நாட்டு அரசர்கள் எல்லாம், 'அரசு தனக்குச் சொந்தமானது அல்ல,' என்ற உயரிய எண்ணத்துடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டும் காலக் கண்ணாடிகளாய்க் காட்சி தரும் வரலாற்றுச் சுவடிகள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை, இன்று—ஏன்?

வடநாட்டு அரசர்கள் எல்லாம்—அரசு தனக்கே உரியது; அதைத் தன்னிஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் ஆளலாம்; என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; நாட்டைப் பணயமாக வைத்தும் சூதாடலாம்; அதை அடமானம் வைக்கலாம்— என்றெல்லாம் கொண்டிருந்த கோட்பாடுகளுக்கு மாறாக தமிழக அரசர்கள் குடிவழி கோலோச்சிய சரித்திரம் இயம்பும் இலக்கியங்களை எல்லாம் ஏன் இன்றைய மக்களுக்கு அறிவிக்கப் படவில்லை?

தொன்மை வாய்ந்ததெனச் சொல்லப்படும் 'தொல்காப்பியம்' இன்று காணவில்லையே—ஏன்?

ஆழ்கடல்களை, அரபிக் கடல்களை அடக்கி ஆண்டான்—ஆணை கொண்டிருந்தான்—ஈழமும், சீனமும், யவனமும் தமிழ் நாட்டுக் கடற்கரைகளுக்கு வாணிபம் செய்ய ஓடோடி வந்தன—என்று காட்டும் ஏடுகள் எங்கே?

இந்த நாட்டிலே கிடைக்கும் மணியையும் முத்தையும், அரிசியையும் சந்தனத்தையும், அகிலையும் தேக்கையும், பொன்னைக் கொடுத்து அள்ளிக் கொண்டு போகவந்த வேற்று நாட்டவரின் கப்பல்கள், கடற்கரையோரத்தில் நின்று கொண்டு அலைகளால் ஆடிக் கொண்டிருப்பது, யானை தலை அசைப்பது போன்று இருக்கிறதென்ற வர்ணனைகள் மிக்க வரலாற்றுச் சுவடிகள் மக்கள் வாழ்வில் இடம் பெறாமல் போவானேன்?

காவிரிப்பூம் பட்டினத்தில், நாள் அங்காடி (காலைக் கடை—Morning Bazaar), அல் அங்காடி (மாலைக் கடை—Evening Bazaar) என இரு முறை அங்காடிகளில், கூல வாணிகரும், பழவேர் கடைகளுமாக பல வேறு பொருள்களின் வணிக நிலையங்களும் இந்த வணிக நிலயத்தில் இன்னின்ன பொருள்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டத்தை மீறுவதை சகிக்க முடியாதாம்

உ. பி., திரு-கொச்சியில் நடைபெறும் கிளர்ச்சிபற்றி பண்டிதரின் சித்தாந்தம்

நங்கல், ஜூலை 8—

"சுதந்திர இந்தியாவில், எந்த ஒரு கட்சியும், சட்டத்தை மீறி மேற்கொள்ளும் முயற்சியை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உத்திர பிரதேசத்தில், மக்கள் சோஷலிஸ்டு கட்சியினர் செய்யும் கிளர்ச்சி குறித்தும், அவர்களில் சிலரைக் கைது செய்துள்ள உ. பி. சர்க்காரின் செயல் பற்றியும், நான் கருத்து தெரிவிப்பதற்கு விரும்பவில்லை. ஆனால், சட்டத்தை மீறுவது என்பது மட்டும் முழுவதும் தவறுடையது எனக் கூறுகிறேன்."

"திரு—கொச்சியில் மக்கள் சோஷலிஸ்டு கட்சிதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வருகிறது: ஆனால், அவ்வாட்சி, 144 தடையுத்தரவை மீறினர்கள் என்பதற்காக, அண்மையில், சிலரைக் கைது செய்திருக்கிறது. இக்குறிப்பிட்ட விஷயத்தில், மக்களைக் கைது செய்தது சரியானதா அல்லது தவறானதா என்பது பற்றி எனது கருத்தை அறிவிக்க நான் தயாராக இல்லை. உத்திர பிரதேசத்தில் குடியுரிமை பறிக்கப்படுகிறது எனக் கூறி மீறிருந்து கூவும் மக்கள் சோஷலிஸ்டு கட்சியினர், அவர்களுடைய சொந்தக் கட்சியினரால் நடத்தப் பெறும் திரு—கொச்சி சர்க்கார் என்ன செய்கிறது என்பதை நோக்க வேண்டும்" "சர்க்கார் எவ்வகைப் பெயர் தாங்கியுள்ள எதுவும், சட்டத்தை மீறுவதை சகித்துக்கொள்ளாது." என்று நங்கல் கால்வாயைத் திறந்துவைத்தபோது பண்டித நேரு குறிப்பிட்டார்.

'என் பெயர் வேண்டாம்!'

நேரு மறுத்துவிட்டார்

வடநாட்டில்—பஞ்சாபில் கட்டப்படும் பக்ரா அணைக்கட்டுக்கு 'ஜவகர் அணைக்கட்டு' என்று பெயரிட வேண்டுமென்று பஞ்சாப் பிரதமர் பீம் சேன் சச்சார் விரும்பினாராம்!

பண்டித நேரு, தன் பெயரை அணைக்கட்டுக்கு வைக்க வேண்டாமென்றும், அது மக்களுக்காக கட்டப்பட்டதென்றும், தனி நபருக்காக அல்லவென்றும் கூறி மறுத்துவிட்டார் என்று தெரிகிறது.

இப்போது அணை கட்டப்படும் ஊரின் பெயரான பக்ரா கிராமத்தின் பெயரை ஒட்டியே 'பக்ரா அணை' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

தெ. ஆற்காடு ஜில்லா போர்டு தேர்தல்

உழைப்பாளர் கட்சி—காங்கிரஸ் கூட்டணி?

ஜில்லா போர்டு தேர்தலில் தமிழ் நாடு உழைப்பாளர் கட்சி, காங்கிரசுடன் சேர்ந்து போட்டியிட காங்கிரஸ் கட்சியுடன் பேச்சு வார்த்தை நடத்த ராமசாமி படையாச்சிக்கு அதிகாரமளித்தது. இது பற்றி இன்னமும் காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கவில்லை என்று எஸ். எஸ். ஆர். கூறினார்.

சமீபத்தில் இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்தி, பிறகு உழைப்பாளர் கட்சித் தலைவர்களோடு கலந்து இறுதி முடிவு செய்யப்படுமாம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 10—7—54 சனி

பொதட்டூர்பேட்டை மாநாடு!

"மொழிவழி மாநிலமா? அது ஆகாது, கூடாது!" என ஆர்ப்பரித்த பண்டிதரின் ஆணவம், பொட்டி ஸ்ரீராமுலுவின் பிணம் விடுத்த அறைகூவலுக்கு ஆளாகி, அழிந்துபட்டு, கடந்த அக்டோபரில் அமைக்க ஆந்திர மாநிலத்தில், 'தகராறுக்கிடமான பிரதேசம்' என்ற பிரகடனத்துடனும், 'தகராறு தீர எல்லைக் கமிஷன் வரும்' என்ற உறுதி மொழியுடனும் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்ட சித்தூர் மாவட்டத்தின், தமிழகத்துடன் இணைக்கப்பட இருக்கிற — இணைக்கப்பட வேண்டிய பகுதிகளில் நடுநாயகமாக விளங்குவது பொதட்டூர்பேட்டை!

தங்கள் மொழி பேசும் மக்களுக்காக அமைந்துள்ள மாநிலத்துடன் ஒன்றி வாழ வேண்டுமென்ற உணர்வு ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களுக்கு இருத்தல் இன்றியமையாதது. அப்படி வாழ ஆசைப்படுவது அவர்களின் நியாயமான உரிமையுங்கூட!

இந்த நிலைக்கு மாறாக, சித்தூர், திருத்தணி முதலிய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள், ஆந்திர மாநிலத்துடன் வாழ வேண்டிய கட்டாயமான நிலையில் இன்றிருக்கிறார்கள். அந்த அவல நிலையை மாற்றி தங்கள் தாய் மொழி பேசும் மக்களுடன் இணைந்து வாழ வேண்டுமென்ற இதயத்துடிப்பு அப்பகுதி மக்கள் ஒவ்வொருவரிடமும் இருப்பது இயல்பு.

ஆந்திர மாநிலம் உருவாவதில் வடநாட்டு ஆதிக்கக்காரர்கள் காட்டிய காலதாமதமும் பிடிவாதமும், சித்தூர் தமிழ்ப் பகுதிகள், ஆந்திர மாநிலம் உருவாகிய போதிலேயே, தமிழகத்துடன் இணைவதற்கு முடியாமற் போனமைக்கு ஒரு காரணம். ஆந்திர மாநில அமைப்புக்காக, உயிரையும் பணயம் வைத்துப் போராடிய ஆந்திர மக்களின் உரிமை வேட்கையும், நியாய அநியாயங்களை அலசி ஆராய்ந்து பார்க்க அவர்களுக்கு அவகாசத்தைத் தரவில்லை. தங்களின் நெடுநாளைய ஆசை, பூர்த்தியாக வேண்டும், கனவு நனவாக வேண்டும் என்ற எண்ணமே அவர்களிடம் தலைதூக்கி நின்றது. அந்த எண்ணத்தின் வேகம் 'சித்தூரிலும் ஆந்திரர்கள் வாழ்கிறார்கள் ஆகவே அதுவும் எம்முடையதுதான்' என்று உரிமை கொண்டாட வைத்துவிட்டது ஆந்திரர்களை!

உண்மை நிலை அவர்களுக்கு உரியவர்களால் எடுத்துச் சொல்லப்படுமேனுல், ஆந்திரர்கள் இன்று, சித்தூர், திருத்தணிப் பகுதியில் கொண்டாடும் பாத்தியதையை விட்டுக் கொடுத்துவிடுவார்கள் என்று நம்ப நியாயமிருக்கிறது.

ஆனால் "தகராறுக்கு இடமான பிரதேசம் என்று பிரகடனப்படுத்தினுமே! தகராறுக்கு முடிவு காண எல்லைக் கமிஷன் அமைக்கிறோம் என்று உறுதியளித்தோமே! அந்த உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டுமே!" என்ற அக்கறையும், கவலையும் மத்திய அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தெரியக் காணோம்!

பிரச்னைகளுக்கு, உடனுக்குடன் முடிவு காண வேண்டும் என்ற புத்திக் கூர்மையும் அரசியல் நேர்மையும் அவர்களுக்கு, இன்று பெயருக்குக் கொண்டிருக்கிற "நாட்டின் இலங்கை இந்தியரின்" பிரச்னையிலேயே வரக் காணோமே! இந்த மாநிலத் தகராறுகளிலா அவர்களுக்கு வரப் போகிறது?

"எப்படி என் மாநிலப் பள்ளிகளில் உன் மொழியைக் கற்றுத் தருவேன்? எப்படி இந்தப் பகுதிகளை தமிழகத்துக்குத் தர முடியும்?" என்று பேசுவது மட்டுமின்றி காரியங்களையும் வேகமாகச் செய்து கொண்டிருக்கும் ஆந்திர அரசின் நிதானமற்ற போக்காலும், சித்தூர் தமிழ்ப் பகுதி மக்கள் சற்று உள்ளம் கொதிப்படைந்திருப்பது தவறல்ல!

இந்தப் பிரச்னைக்கு முடிவு கூறத் தயங்கிக் கொண்டிருப்பவர்களை — தடங்கலாய் இருப்பவர்களை தட்டிக் கேட்கிற உள்ள உரமும் அவர்களுக்கு இன்று நிலவுகிற சூழ்நிலைகளால் ஏற்பட்டிருப்பதும் உண்மை.

இந்த உள்ள உரத்தோடு, "எங்கள் தாய் மொழி பேசும் மக்களுடன்தான் நாங்கள் வாழ்வோம்" என்ற நியாயமான அடிப்படையில் ஒன்றுபட்டிருக்கும் சித்தூர் தமிழ்ப் பகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக ஆசை காட்டவும், அதன் விளைவாக உருவாகும் பலத்தை தங்கள் பின்னணி பலமாகக் கொண்டு அரசியல் புகழ் பெறப் பார்க்கவும் சில 'மூன்றாந்தரங்கள்' முன்வருவது எதிர்பார்க்கக் கூடியதே! மரிக்கால இறுதியில் காளான்கள் முளைப்பது போலவே, வாய்ப்பு ஏற்படுகிற தருவாயில் அரசியல் காளான்கள் முளைப்பதும் இயல்பேயாகும்!

அத்தகு அரசியல் காளான்கள் இரண்டொன்று சித்தூர் மாவட்டத்தில் தமிழ் மொழி பேசும் பெரும்பான்மையினரைக் கொண்ட பகுதி சென்னையுடன் சேர்ந்துவிட்டால், தங்களுடைய எதிர்கால சட்டசபை வாழ்விற்கு உத்திரவாதம் கிடைத்து விட்டதாகும் என, ஆந்திரர்களுக்கு எதிராகத் தமிழர்களையும், தமிழர்களுக்கு எதிராக ஆந்திரர்களையும் மோதிக்கொள்ளத் தூண்டுவது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஆந்திரர்களும், தமிழர்களும் அடிதடியில் முனைவதைப் பற்றி அவர்களுக்குத் துளியும் கவலை கிடையாது. அவர்களுக்குள்ள கவலை அனைத்தும், தங்களுடைய எதிர்கால அரசியல் வாழ்வை உறுதி செய்து கொள்வது என்பதுதான்!

சித்தூர் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் பிறப்புரிமை இழந்து தவிக்கின்றனர். அவர்கள் பெயர் கூறி, அவர்கள் சோகத் தீயை மூட்டி சிலர் குளிர்காய்ந்து வருகின்றனர்.

இத்தகு சூழ்நிலையில்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தவர் மாநாடு ஒன்றைக் கூட்டியுள்ளனர், பொதட்டூர் பேட்டையில்!

தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய மொழிவழி மாநிலங்கள், இனத்தால் ஒன்றுபட்டு, சுயநிர்ணய அடிப்படையில் ஒரு சுதந்திர சமதர்மக் குடியரசு ஆட்சியைக் காணவேண்டும் என்பதை லட்சிய முழக்கமாகக் கொண்டுள்ளது திராவிட முன்னேற்றக் கழகம்.

லட்சியத்திற்கு தமிழகத்தின் அரசியல் அறிவு பெற்ற பெரும்பகுதி மக்களின் உள்ள உணர்வு பூர்வமான ஆதரவு கிடைத்துவிட்டது. கேரள, ஆந்திரப் பகுதி மக்களிடையேயும் பரவலான ஆதரவு கிடைத்து வருகிறது. அதிலே ஒரு பகுதிதான், சித்தூர் மாவட்ட தி. மு. க மாநாடு.

சித்தூர் பகுதி தமிழ் மக்களின் உரிமை காக்க ஏற்கனவே தி. மு. கழகப் பொதுக்குழு, தோழர் என். வி. நடராசன் தலைமையில், ஒரு தனி விசாரணைக் குழுவையும் நிறுவியுள்ளது. அந்தக் குழுவும் தனது வேலைகளைத் துவக்கியிருக்கிறது.

இந்த நேரத்தில் சித்தூர் தமிழ்ப் பகுதி மக்கள், நாம் என்ன சொல்ல இருக்கிறோம். அவர்களின் உரிமை பற்றி என்று தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கத் தான் செய்வார்கள்.

ஆந்திரப் பகுதியிலே நமது லட்சிய முழக்கம் ஒலிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிற நாம், அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, அவர்களின் உரிமை காக்க, அவர்களின் தோளோடு தோள் நின்று போராடுவோம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கிறது.

அந்த நல்ல நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிற தி. மு. கழகத்தவர்களும், அவர்களின் அருமைப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், சித்தூர் தமிழர் பிரச்னைக்கு நல்லதொரு முடிவு தர இருக்கிறார்கள் — பொதட்டூர் பேட்டை மாநாட்டில்!

அந்த மாநாட்டிற்கு இந்தப் பிரச்னையே ஒரு தனிச் சிறப்பைத் தந்திருக்கிறது என்றால் மிகையாகாது.

அந்தச் சிறப்புடைய மாநாட்டில் பங்கு பெற தோழர்களே! ஆயிரமாயிரமாகத் திரண்டு வாரீர்! — என்று அழைக்கிறோம்!

அரிசி மீதுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளும் நீங்கும்

இந்திய சர்க்கார் உத்தரவு

உணவு அமைச்சாலயம் மூடப்படும்

"ஜூலை 10-ந் தேதியிலிருந்து அரிசி மீதுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளும் நீங்கும்," என்று இந்திய சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இப்போது கோதுமையின் மீது பிரதேசவாரி கட்டுப்பாடு மட்டுமே அமுலில் இருக்கிறது. கோதுமை மற்றும் குறைவினால் இந்தக் கட்டுப்பாடு இருக்கவில்லை. இந்திய சர்க்காரிடம் கையிருப்பில் உள்ள 10 லட்சம் டன் கோதுமையை விற்பனை செய்வதில் நஷ்டமேதும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே கோதுமையின் மீது பிரதேசவாரி கட்டுப்பாடு இருக்கிறதென்று இந்திய சர்க்கார் விளக்கம் தருகின்றனர்.

இப்போது அரிசியை, எவ்வித கட்டுப்பாடும் இன்றி இந்திய யூனியன் எல்லைக்குள் எங்கு வேண்டுமென்றாலும் எடுத்துச் செல்லலாம்.

சர்க்காரிடம் தற்போது 13 லட்சம் டன் அரிசி கையிருப்பில் இருக்கிறதாம்.

அரிசி மீதுள்ள கட்டுப்பாடு நீக்கப்பட்டதும் இந்திய சர்க்காரில் உள்ள உணவு அமைச்சாலயம் மூடப்படும் என்றும், விவசாய இலாகா மட்டும் இப்பிரச்னைகளைக் கவனிக்கப் போதுமானது என்றும் இந்திய சர்க்கார் கருதுகிறது.

ஆற்று நீர் உபயோகத்தில் மாநில அரசுகளின் தகராறுகளைத் தீர்க்க......

மக்கள் சபையில் மசோதா வருகிறது

மக்கள் சபையின் அடுத்த கூட்டத்தின்போது, ராஜ்யங்களுக்கிடையே, ஆற்று நீரை உபயோகித்துக் கொள்வதில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து, நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும் ராஜ்யங்களை ஒத்துழைக்கச் செய்யவும் கோரும் ஒரு மசோதாக் கொண்டுவரப்படும் எனத் தெரிகிறது. அந்த மசோதா, இப்போது எல்லா ராஜ்ய சர்க்கார்களுக்கும் தங்கள் தங்கள் கருத்தை அறிவிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அந்த மசோதாவின்படி, பொது ஆற்று நீரை, உபயோகிக்கும் விஷயத்தில் ராஜ்ய சர்க்கார்களிடையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க ஒரு குழு நிறுவப்படும் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

மைசூரில் பீங்கான் தொழிற்சாலை

ரூ. 63 லட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும்

ஜப். கம்பெனியுடன் ஒப்பந்தம்

பெங்களூர், ஜூலை—

சர்க்காரால் நிர்வகிக்கப்படும் பீங்கான் தொழிற்சாலை ஒன்றின் புதிய கட்டடத்திற்கு மைசூர் ராஜப்பிரமுகர் அஸ்திவாரக்கல் நாட்டினர். ரூ 63 லட்சம் செலவில் அந்த தொழிற்சாலை பெரிதாக்கப்படுகிறது இதற்காக, ஜப்பான் கம்பெனி ஒன்றுடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் மின்சார வேலைக்குத் தேவைப்படும் பீங்கான் சாமான்கள், ஆண்டொன்றும் 300 டன் ஆக இருந்தது இப்போது 2500 டன்னாக உயர்த்தப்படும் எனத் தெரிகிறது. அந்த உற்பத்தி நாட்டின் தேவையை முழுதும் பூர்த்தி செய்யக் கூடும் என்றும் தெரிகிறது.

"மைசூரில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டே அப்பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன பீங்கான் தொழில் பயிற்சி அளிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளன." என்று மைசூர் மந்திரி திரு. சித்த வீரப்பா குறிப்பிட்டார்.

டல்லஸ் பயமுறுத்துகிறார்

ரத்து அதிகாரத்தைப் பிரயோகிப்பாராம்!

"கம்யூனிஸ்டு சீனாவை ஐ. நா. சபையில் அனுமதிப்பதை அமெரிக்கா தனது ரத்து அதிகாரத்தை உபயோகித்து தடுத்துவிடும்,"

என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ் கூறினார்.

சீன கம்யூனிஸ்டுகளுக்கு ஐ. நா. சபையில் தேவையான வாக்குகள் கிடைக்காது என்று தான் நம்புவதாக டல்லஸ் மேலும் கூறினார்.

சீனாவை ஐ. நா.-வில் அனுமதிக்க வேண்டுமென்றால் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் தேவை என்றும் டல்லஸ் கூறினார்.

அணுசக்தியால் சமாதான காரியங்கள்!

விவாதிக்க ஆக்ஸ்போர்டில் விஞ்ஞானிகள் மாநாடு

அணுசக்தியை சமாதானக் காரியங்களுக்கு உபயோகிப்பது குறித்து, 30 நாடுகளில் ஆராய்ச்சி நடத்திவரும் 700 விஞ்ஞானிகள், ஜூலை 19 முதல் 20-ந் தேதி வரை லண்டன் ஆக்ஸ்போர்டில் கூடிப் பேசுவர் எனத் தெரிகிறது. அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில் கண்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதிப்பர்.

ஹார்வெல் நகரில் உள்ள அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனத்தார் அமைக்கும் மாநாடு ஒன்றிலும் அவர்கள் கலந்து கொள்வர். ஆங்கு பலவகை அணுக்கள் பற்றிய ஆராய்ச்சியுடன், தங்களின் கடந்த கால அணு ஆராய்ச்சியின் முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வார்களாம்.

வைத்திய பரிசோதனை, சிகிச்சை இலாகாவிலும், தொழில் முன்னேற்றங்களிலும், விவசாயத் துறையிலும், அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றியும் அவர்கள் ஆராய்வர்.

இதைப் போன்றதொரு மாநாடு, 1951 ஜூலையில் ஆக்ஸ்போர்டிலேயே நடைபெற்றது. அதற்கு 500-க்கும் அதிகமான விஞ்ஞானிகள் வந்திருந்தனர்.

உலகத்தில் உள்ள குழந்தைகளில் பாதிபேருக்கு கல்வி இல்லை!

சர்வதேச சங்க டைரக்டர்-ஜெனரல் தரும் தகவல்

"உலகத்தில் உள்ள 55 கோடி குழந்தைகளில் பாதிக்குமேல் எந்தவிதக் கல்வியும் பெறுவதில்லை. இப்படி பள்ளி செல்லாமலிருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 25 கோடி 70 லட்சம் என மதிப்பிடப்படுகிறது," என்ற தகவலை 'யுனெஸ்கோ'வின் 'டைரக்டர்—ஜெனரல்' தர் ஏவான் என்பார், உலகத்தின் 54 நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் 17-வது சர்வதேச கல்வி மாநாட்டைத் துவக்கும் போது வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுவதாவது:- "உயர்தரக் கலாசாலைக் கல்வி குழந்தைகளின் பெரும் பகுதியினருக்குத் தரவேண்டும். அந்தக் குழந்தைகளுக்கு குறிப்பிட்ட அறிவுத்துறை தகுதியோ அல்லது, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமான சமுதாய அந்தஸ்தோ இருக்க வேண்டுமென எதிர்பார்த்தலாகாது," எனவும் குறிப்பிட்டார்.

364 நாட்கள் மட்டும் கொண்ட வருடம்

ஆண்டு இறுதியில் உலக தினம்!

உலகப் பொது காலண்டர் காண நடவடிக்கை

உலக முழுவதற்கும் ஒரே பொதுக் 'காலண்டர்' கொண்டு வருவதற்கான முதல் அதிகார பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்திய விஞ்ஞானியான பேராசிரியர் மேகநாத் சாஹா ஐ. நா. பொருளாதார சமூக, கலாச்சார குழுவின் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் கமிட்டிக் கூட்டத்தில் உத்தேச உலக காலண்டரைப் பற்றி விளக்கிப் பேசினார்.

இந்த உலக காலண்டர் திட்டம் எந்த நாட்டினுடையவும் சமூகத்தினுடையவும் சமூக மத வாழ்க்கையில் தலையிடும் நோக்கமுடையதல்ல என்று அவர் கூறினார்.

இந்த புதிய முறையின்படி ஒவ்வொரு ஆண்டும் 4 சம பிரிவுகளாக்கப்படும் ஒவ்வொரு கால் வருடத்திற்கும் 91 நாட்கள் இருக்கும். ஒவ்வொரு கால் வருடத்தின் முதல் மாதத்திற்கும் 31 தேதி இருக்கும் அதாவது ஜனவரி, ஏப்ரல், ஜூலை அக்டோபர் மாதங்களுக்கு 31 தேதிகள் இருக்கும். இதன்படி வருடத்திற்கு மொத்தம் 364 நாட்கள்தான் இருக்கும். ஒவ்வொரு வருடத்தின் கடைசி நாளும் உலக தினமாகக் கொண்டாடப்படும். அந்த நாளுக்கு வாரம் குறிப்பிடப்படமாட்டாது. டிச 31-ம் தேதி உலக தினமாகக் கொண்டாடப்படும்.

இந்தியாவில் 60,000 கம்யூனிஸ்டுகள்!

மாஸ்கோ புள்ளி விவரம் தருகிறது

சட்ட விரோதமாக்கப்பட்டோ, அல்லது சட்டவரம்பிற்கு உட்பட்டோ இயங்கும் கம்யூனிஸ்டு இயக்கமில்லாத நாடு உலகில் எதுவுமே இல்லையாம்!

மாஸ்கோவிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிற புத்தகமொன்றில் இவ்வாறு காணப்படுகிறதாம்.

"கிளர்ச்சிக்காரர்களின் குறிப்புப் புத்தகம்" என்ற தலைப்புடைய அப்புத்தகம், எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகளின் விபரங்களைத் தருகிறது. இது, சோவியத் கம்யூனிஸ்டு கட்சியால் ரஷிய பிரசாரகர்களுக்காகத் தயார் செய்யப்பட்ட புத்தகமாகும். இப்புத்தகம் ஒன்று லண்டனில் கிடைத்திருக்கிறது.

இதன்படி, இந்தியாவில் 60,000 கம்யூனிஸ்டுகள் இருக்கின்றனராம்!

கொரியாவிலும், வியட்நாமிலும் 7,00,000 கம்யூனிஸ்டுகள் உள்ளனர் என்று மாஸ்கோ சர்வே கூறுகிறது.

முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சி மிகவும் பலம் பொருந்தியதாகவும், கட்டுப்பாடுடையதாகவும் இருக்கிறதாம்!

பிரான்ஸ், 8,00,000; இத்தாலி 21,20,000; பிரிட்டன் 35,000; பெல்ஜியம் 1,00,000; ஹாலந்து 50,000; டென்மார்க் 60,000; ஸ்வீடன் 60,000; பின்லாந்து 50,000; ஜப்பான் 1,00,000—என்று கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் இப்புள்ளி விபரங்கள் 1948—50-ம் ஆண்டில் எடுத்தவையாகும்; இந்தியாவின் தொகை 1953ம் ஆண்டில் கணக்கிடப்பட்டதாகும்.

பர்மா, மலேயா போன்ற கிழக்கு நாடுகளில் உறுப்பினர் தொகை என்னவென்று கூறப்படவில்லை. பாகிஸ்தான், சயாம், இலங்கை, இந்தோனேசியா, மேற்கு ஜெர்மனி, பிலிப்பைன்ஸ், நியூசிலாந்து ஆகிய நாடுகளின் எண்ணிக்கையும் அப்புத்தகத்தில் காணப்படவில்லை.

அமெரிக்கா, பாகிஸ்தான், ஜப்பான், ஆஸ்திரேலியா, மேற்கு ஜெர்மனி போன்ற முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் நிலை மிகவும் பயங்கரமாக இருக்கிறதாம்.

சில நாடுகளில் கம்யூனிஸ்டுகள் சிறையில் வாடுவதுடன், கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்களைக் கொல்ல சதியும் நடைபெறுகிறதாம்!

காஞ்சி தியாகராயர் மன்ற ஆண்டுவிழா

இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவு

காஞ்சி தியாகராயர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாப் பொதுக் கூட்டம் நேற்று மாலை கண்ணன் டாக்கீசுக்கு அருகிலுள்ள மைதானத்தில் மிகச் சீரும் சிறப்புடன் நடந்தேறியது. அழகான பந்தல் அமைக்கப்பட்டு, மின் விளக்குகளால் அலங்காரிக்கப்பட்டிருந்தது. கூட்டத்திற்குச் சுமார் 8000 மக்கள் வந்திருந்தனர்.

கூட்டம் துவங்குவதற்கு முன் தோழர் முருகேசன் இயக்கப் பாடல்களை இனிமையாகப் பாடினார். பின்னர் தோழர் டி. கே. மூர்த்தி தலைமை தாங்கி முன்னுரை நிகழ்த்தினார் மன்றச் செயலாளர் ஆண்டு அறிக்கையை அடுத்துப் படித்துக் காண்பித்தார். தோழர்கள் சம்பந்தம், எத்திராஜ் ஆகிய இருவரும் கழகத்தின் கொள்கைகளைப் பற்றியும், எதிர்க்கட்சிக்காரர்களின் போக்கு பற்றியும் அழகுற எடுத்து விளக்கினார்கள்.

அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தாழ்த்தப்பட்ட — பிற்பட்ட வகுப்புகளுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் என்—எப்படி வாதாடுகிறது என்பது பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையின் அவசியம் பற்றியும், பண்டித நேரு சிதம்பரத்தில் திராவிட இயக்கத்தாரைப் பற்றிக் கூறிய இழிமொழி, எவ்வாறு அவரது தகுதி, திறமை, பதவி, படிப்பு ஆகியவற்றிற்கு ஏற்றதாகாமல், அரசியல் கண்ணியம்—நேர்மை—நாகரிகம்—பண்பு ஆகியவற்றை இழந்த தன்மையைக் காட்டுகிறது என்பது பற்றியும், ஆச்சாரியார் ஆட்சியின் அலங்கோலத்தைப் பற்றியும், அவரது வீராப்புப் பேச்சு எப்படி வீழ்ந்துபட்டது என்பது பற்றியும், அவர் புகுத்திய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் அபத்தத்தைப் பற்றியும், தோழர் எஸ். எஸ். இராமசாமி காங்கிரஸ் மந்திரி சபையில் சேர்ந்ததும், அவரைத் தோழர் காமராசர் சேர்த்துக் கொண்டதும் எப்படி ஜனநாயகப் படுகொலையாகும் என்பது பற்றியும் விளக்கிப் பேசினார். கடைசியில் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் கூற, தலைவர் முடிவுரையுடன், செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது. (ந.—தி.)

'தினத் தந்தி' போக்கிற்குக் கண்டனம்

திருப்பூர், ஜூலை 7—

4—7—54 மாலை 4 மணிக்கு வள்ளுவர் படிப்பகத்தில் தோழர் அ. மாரப்பன் தலைமையில் திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம் நடைபெற்றது.

தோழர் பி. கிட்டப்பன் திராவிட நாடு பிரிவினை போராட்டத்தில் ஈடுபட இளைஞர்கள் தயாராகிக் கொள்ள வேண்டுமென்றும், தோழர் ஈஸ்வரன் எல்லா நாட்டையும்விட திராவிடம் எல்லா வசதிகளும் பொருந்தியிருக்கிறது என்றும், நாடு பிரிந்தால் வாழ முடியும் என்றும், தோழர் கணேசன் திராவிட நாடு பிரிவினைக்கு மாற்றுக் கட்சித் தோழர்கள் செய்யும் பொய் பிரசாரத்தைக் கண்டித்தும், தோழர் கே. லெனின் திராவிட நாடு பிரிவினை நாள் ஏன் கொண்டாடுகிறோம் என்பதையும், 'தினத் தந்தி' பத்திரிகை செய்துவரும் பொய் பிரசாரத்தின் தன்மையை விளக்கியும் சொற்பொழிவாற்றினர். பின்னர், 'தினத் தந்தி' பத்திரிகையில் திராவிடர் இயக்கத் தலைவர்களின் பேச்சைத் திரித்து பத்திரிகையில் போடுவதையும், சமீபத்தில், "திருப்பூரில் தி. மு. கழக பிரமுகருக்குக் கத்திக்குத்து" என்று விளம்பரம் செய்து அத்தோழர் பெயர் சுப்ரமணியம் என்பதையும் போடாமல், மேற்படி தோழர் கட்சியிலிருந்து விலகி ஒரு ஆண்டு ஆகிவிட்டதைத் தெரிந்துகொள்ளாமலும் 'தி. மு. க. பிரமுகர்' என்று விளம்பரம் செய்ததையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், இனியேனும் 'தினத் தந்தி' நிருபர்கள் திருந்தி நடக்கவேண்டுமெனவும் கோரப்பட்டது.

விவசாய வருமான வரி மசோதா

அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படலாம்

காப்பி, தேயிலை, ரப்பர் போன்ற தோட்டப் பண்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது விவசாய வருமான வரி விதிக்க சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

இதற்கான மசோதா சென்னை சட்டசபையில் அடுத்த கூட்டத்தில் கொண்டுவரப்படலாம்.

மசோதாவின் கொள்கையை சென்னை மந்திரி சபை அங்கீகரித்துவிட்டது.

வரவு—செலவு திட்டத்தில் விழும் துண்டை சரிக்கட்டவே இந்த ஏற்பாடு என்று தெரிகிறது.

திருமணங்கள்

காஞ்சீபுரம் பிள்ளையார் பாளையம் மண்டபத் தெருவில், 4—7—54 காலை 7-30 மணிக்கு திரு டி. சி. கருப்பண்ணன் எம். ஏ., தலைமையில் தோழர் ஏ. இராசமாணிக்கம்—தோழியர் வள்ளிநாயகி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் பண்டைத் தமிழர்கள் திருமணம் காதல், அன்பு அடிப்படையில் ஆரியச் சடங்குகளின்றி அறிவு முறைப்படியே நடைபெற்று வந்திருக்கின்றது என்றும்; ஆரியர் ஆதிக்கம், ஏற்பட்டு வர்ணாசிரமக் கொடுமை வளர்ந்து, ஆரியச்சடங்குகளும், மூடநம்பிக்கைகளும் நம் மக்களைப் பற்றிக்கொண்டு இடர்ப்பட நேரிட்டதென்றும், இனி பழமைக்கும், மூடநம்பிக்கைக்கும், கண் மூடிப் பழக்க வழக்கம் என்ற செய்கைக்கும், நம் மக்கள் தலைவணங்கி பொருள் இழந்தும், அறிவு இழந்தும் அடிமைப்படக்கூடாதென்றும், அறிவுக்கு ஏற்ற முறையில் திருத்திய திருமணங்களையே செய்து நம் மக்கள் சமூக முன்னேற்றம் அடைய வேண்டுமென்றும் விளக்கினார்.

மணமக்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் தோழர்கள் சம்பந்தம், சி. வி. எம். அண்ணாமலை தெய்வசிகாமணி எம். எல். ஏ., அ. பொன்னம்பலனார், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு தோழர் நாராயணசாமி நன்றி கூறினார். திருமணத்தை யொட்டி—மணமக்கள் சார்பில் "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ 10 அன்பளிக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

* * *

சென்னை பூந்தமல்லி கன்டோன்மெண்ட், மேட்டுத் தெரு எண் 9 இல்லத்தில் 5—7—54 காலை 10-30 மணிக்கு தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ., தலைமையில் தோழர் த. திருநாவுக்கரசு—தோழியர் லோகம்பாள் அவர்கட்கும், தோழர் மதுரை—தோழியர் அன்னம்மாள் அவர்கட்கும், புரோகிதச் சடங்குகள் நீக்கப்பட்டு, ஐந்தே நிமிடங்களில், திருத்திய முறையில், இரு திருமணங்களும் நடைபெற்றது மணமக்கள் மலர் மாலைகள் சூட்டிக் கொண்டனர். தலைவர் சீர்திருத்தத் திருமணத்தின அவசியம் பற்றி விளக்கவுரையாற்றி, மணமக்களைப் பாராட்டி வாழ்த்தினார்.

தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, அ. பொன்னம்பலனார், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டியும், வாழ்த்துரைகள் கூறியும், சுயமரியாதைத் திருமணம், பெண்கட்குச் சொத்துரிமை, திருமண ரத்துரிமை ஆகிய முறைகளைப் பற்றி விளக்கம் தந்தனர்.

ஆரியப் புரோகிதச் சடங்குகளாலும், அர்த்தமற்ற வீண் மூடநம்பிக்கைகளாலும், மக்கள் பொருளையும், அறிவையும் இழந்து இடர்ப்படுகின்றார்களென்றும், ஆண்—பெண் மனமொத்த காதல் இல் வாழ்க்கைக்கு மன ஒற்றுமை, அன்பு, உறுதிப்பாடு தான் முக்கியமென்றும் குறிப்பிட்டனர்.

மணமக்கட்கு வாழ்த்து மடல்களும், மலர் மாலைகளும் பல தோழர்களாலும், கழகங்களாலும் அளிக்கப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறப்பட்டது.

திருமணத்தை யொட்டி, மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 5 அன்பளிக்கப்பட்டது — பெற்றுக் கொண்டோம்—நன்றியுரியது-பொறுப்பாளர்.

• • •

சென்னை கோகலே மண்டபத்தில் 7-7-54 காலை 9½ மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில், தோழர் கு. மாதையன்—தோழியர் ச. இராஜேஸ்வரி கலப்பு திருமணம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியைப் படித்து மலர் மாலைகள் சூட்டிக்கொண்டனர். மணமக்கள் கலப்பு திருமணம் செய்து கொண்டதைப் பாராட்டியும், வாழ்த்துரைகள் வழங்கியும் தோழர்கள் டாக்டர் மு. வரதராசன், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்கள் விரிவுரையாற்றினர். மணமகன் நன்றி கூறினார்.

மணமக்கட்கு வாழ்த்து மடல்களும், மலர் மாலைகளும் சூட்டி அன்பளிப்புப் பரிசுகளும், புத்தகங்களும் நண்பர்கள் வழங்கினர். வெளியூர், உள்ளூர் நண்பர்களும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 10 அன்புடன் உதவினார்கள்—பெற்றுக் கொண்டோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

5—7—54 காலை 10 மணிக்கு சென்னை மாம்பலத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் தோழர் குமரேசன்—தோழியர் மல்லிகாதேவி மணமணம் நடைபெற்றது. தோழர்கள் பலர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். வாழ்த்துப் பத்திரங்களும், மலர்மாலைகளும், புத்தகங்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. அன்று மாலை இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

∴ ∴ ∴

5—7—54ல், மதுரை செக்காணப்பட்டி ஜமீன்தார் பங்களாவில் தோழர் எஸ். பி. செல்லப்பாவிற்கும்—தோழியர் தேவகிக்கும் திருமணம் நடைபெற்றது.

முதுமைப் பருவம் பற்றி மாநாடு!

முதுமைப் பருவத்தைப் பற்றி விவாதிக்க ஐம்பது நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் ஜூலை 19-ல் லண்டனில் கூடிப் பேசுவார்கள்.

இம்மாநாட்டில் வயோதிகர்களின் உடல் அமைப்பு, அப்போது ஏற்படும் வியாதிகள், முதுமைக் காலத்தை இன்பமாகக் கழிக்கும் முறை இவைகளை ஆராய்வார்கள் என்று தெரிகிறது.

இம்மாதிரி ஒரு மாநாடு கூடுவது இதுவே முதல் தடவை எனலாம்!

பிறப்பு

பொள்ளாச்சி தோழர் ஏ. வாசன் அவர்களது மனைவியார் தோழியர் மீனாட்சி அவர்களுக்கு 2—7—54ல் ஓர் பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 'மரகத மணி' என பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூ. 1 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

கடையநல்லூர் தி. மு. கழகப் பொருளாளர் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் ஆறுமுகத்தம்மையாருக்கு 1—7—54ல் ஓர் பெண் மகவு பிறந்து, தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

• • •

5—7—54ல், வாலாஜா தி. மு. கழக (கிளை) செயலாளர் கா. ராமதேவன் துணைவியார் தோழியர் வள்ளியம்மைக்கு ஆண்மகவு பிறந்து தாயும் சேயும் நலம்.

* * *

புதுக்கோட்டை "அன்பு நிலையத்தில்" தோழர் முத்து ரெங்கம் அவர்களின் துணைவியார் கமலா அவர்கள் ஒரு பெண் மகவுக்கு தாயானார். தாயும் சேயும் நலம்.

தென்னிந்தியாவில் வேலை முடிந்தது

மாநில திருத்தக் குழு உறுப்பினர் தகவல்

தென்னிந்தியாவில் மாநிலத் திருத்தக் குழுவின் பணி அநேகமாக தன் வேலையைப் பூர்த்தி செய்து விட்டதென்றும், ஆந்திராவிலும், ஐதராபாத் மாநிலங்களில் சில பகுதிகள் பற்றியும் தான் முடிவு செய்யவேண்டும் என்றும், ஐதராபாத்திலிருந்து விமான மூலம் சென்னை வந்த மாநில திருத்தக் குழு அங்கத்தினர் சர்தார் கே. எம். பணிக்கர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"குழுவின் வேலை சம்பந்தமான சில புள்ளி விவரங்களைச் சரிபார்ப்பதற்காக, தான் வந்திருப்பதாகவும், மாநிலங்கள் சுற்றுப்பிரயாணம் நவம்பருக்குள் முடிந்துவிடுமென்றும் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்றும் கூறினார்.

ஏழைகளுக்கு நிலங்கள்

சென்னைசர்க்கார் திட்டம்

நிலமில்லாத ஏழைகளுக்கு சென்னை ராஜ்யத்தில் உள்ள பயிரிடத்தகுந்த நிலங்களைப் பிரித்துக் கொடுக்க விரிவான திட்டமொன்று சென்னை சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறதாம்.

இத்திட்டத்தின் மூலம் காடு வளர்ப்புக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படுமாம்.

கொடைக்கானல் அருகே மன்னக்காடு பகுதியில் உள்ள 1,000 ஏகர் நிலங்களை நபர் ஒன்றுக்கு இரண்டு ஏகர் நிலம் பிரித்துக் கொடுக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

நிலவரி வசூலிக்க பஞ்சாயத்து போர்டுகள்

பரீட்சார்த்தமாக திட்டம் அமுல்

கிராமங்களில் நிலவரி வசூல் வேலை பூராவும் கிராம அதிகாரிகளுக்குப் பதில், பஞ்சாயத்துக்களிடமே விட்டுவிட வேண்டும் என்று சமீபத்தில் நடந்த சிம்லா மாநாட்டில் சிபார்சு செய்யப்பட்டது. அதையொட்டி சில கிராமங்களில் நிலவரி வசூலிக்கும் வேலை கிராம பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்து சோதனை செய்து பார்க்கப் போவதாக மந்திரி ராமசாமி படையாச்சி கூறினார்.

சென்னை பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துகளுக்கு அரசாங்கம் நிலவரியில் எட்டில் ஒரு பங்கை கொடுக்கவேண்டும். நிலவரி வசூல் வேலையும் அவர்களிடம் ஒப்படைத்து இதற்காக மேற்கொண்டு 100க்கு 10 பங்கு கமிஷன் தரலாம் என்று மந்திரி மேலும் தெரிவிக்கையில் கூறினார்.

காஞ்சி தேக்கம்

புதுவையில் உள்ள அஞ்சல் நிலையங்கள் பிரெஞ்சு கோட்டுகள் ஏற்றுக் கொள்வதை ஜூலை 9-ந் தேதி முதல் நிறுத்திவிட்டன. பிரெஞ்சு சர்க்கார் அஞ்சல் நிலையங்களில் தேங்கியிருக்கும் பிரெஞ்சு கோட்டுகளைப் பெற்றுக் கொண்டு இந்திய கோட்டுகளைத் தராதிருப்பதே இதன் காரணமாகும்.

மந்த நிலைமை

பிரதேச வரிக் கட்டுப்பாடுகள் நீங்கிவிட்டன என்றாலும் சென்னையில் மந்த நிலையே காணப்படுகிறது என்று கும்பகோணம் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சிலம்பும் …………

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் என்பதைக்காட்ட கொடி கட்டி வாணிபம் செய்த மணமும் விளக்கமுமிக்க காவியங்கள் ஏன் மக்கள் மன்றத்திலிருந்து மறைக்கப்பட்டன?

மக்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், அறிஞர் பெருமக்கள் பல்வேறு பொருள்களை விவாதித்துத் தெளிவு கூறவுமாக அமைந்திருந்த பட்டி மன்றங்கள், தமிழ் நாட்டிலே இடம் பெற்றிருந்தது போன்ற பொன்னான சம்பவங்கள் கொண்ட இலக்கியங்கள் எங்கே?

மேலே கண்ட நூல்களினும், கம்ப ராமாயணம், எதனுல், எத்துறையில் சிறந்தது?

தமிழ் நாட்டிலே, அதன் பண்டைப் பெருமைகளைச் சொல்லும் இலக்கியச் சோலைகள் பல இருக்கும்போது, கம்ப ராமாயணம் மட்டும் பொது உடைமை பேசும் ஜீவா காலட்சேபம் செய்கிற அளவுக்கு, புகழப் படுவானேன்?

இதை நாம் அறிந்து கொள்ள கம்ப ராமாயணம் தோன்றுவதற்கான நிலைக்களன்களை எண்ணிப் பார்க்க வேண்டும். எப்போது, எந்தக் காலத்தில், எக்காரணங் கொண்டு கம்ப இராமாயணம் எழுந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

நூற்றாண்டு வாரியாக தமிழக இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றை நாம் கண்டால் ஒரு உண்மை நமக்குப் புலப்படும்.

இரண்டாம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் எழுந்த இலக்கியங்கள் எல்லாம், சிறிதும் மத புராணப் பொய்யுரைகள் கலவாதனவாகவும், இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் இலக்கியங்களில் மதக்கலப்பு ஏற்பட்டது என்பதையும் காண முடியும்.

[மீண்டும் வரும்]

தோழர்களுக்கு

என்னுடைய ஒப்புதல் இல்லாமலே, யாழூர் சத்திரம், ஸ்ரீவைகுண்டம் போன்ற இடங்களில் என்னுடைய பெயரை விளம்பரப்படுத்தி, நான் கலந்துகொள்வதாகக் கூட்டங்கள் கூட்டியிருக்கிறார்கள். நம்முடைய தோழர்கள் செய்யும் இந்த தவறுகள் மூலம் பொதுமக்கள் கழக நடவடிக்கைகள் மேலும், என் மீதும் அதிருப்திபட ஏதுவாகிறது. மேலும், இந்த தவறுகளுக்கு இடம் கொடாமலும், வேறு யாருடைய அனுமதியின் பெயரிலும் என் பெயரையும் பயன்படுத்த வேண்டாமென்றும் தோழர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய தூத்துக்குடி முகவரிக்கே கடிதம் போக்குவரத்து வைத்துக்கொள்ளும்படி தோழர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்,

இரா. சு. தங்கப்பழம்

விற்பனை வரி

மிளகுக்கும், மலைகளில் விளையும் பொருளுக்கும் ஒரே முனையில் விற்பனை வரி விதிக்க சர்க்கார் யோசிப்பதாக திரு-கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை ஏர்ணாகுளத்தில் பேசும்போது கூறினார்,

கழகக் கூட்டங்கள்

★

மேலூர்

11—7—54 ஞாயிறு மாலை

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

காளி

(மாயூரம் வட்டம்)

தி.மு. கழக துவக்க விழா

12—7—54 திங்கள் மாலை

தலைவர் : என். கிட்டப்பா

பேசுவோர் :

என். வி. நடராசன்

கே. எஸ். சௌந்தரராசன்

கே. எஸ். சண்முகம்

★

இராமநாதபுரம்

(முகவை)

12—7—54 திங்கள் மாலை

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

எலத்தங்குடி

(மாயூரம் வட்டம்)

கழகத் திடலில்

13—7—54 செவ்வாய் மாலை

தலைவர் : என். கிட்டப்பா

பேசுவோர் :

என். வி. நடராசன்

கே. எஸ். சண்முகம்

கே. எஸ். சௌந்தரராசன்

★

இராசசிங்கமங்கலம்

அண்ணா திடலில்

13—7—54 மாலை 6½ மணிக்கு

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

எஸ். முத்து

ஏ. எம். அலிசேக் மன்சூர்

திருமணங்கள்

12—7—54 காலை, மணப்பாறையில், தோழர் பி. கோபால கிருஷ்ணன் தலைமையில், கல்லக்குடி அறப்போரில் மூன்று மாத சிறை தண்டனை பெற்ற தோழர் எம். என். கிருட்டிணமூர்த்தி—தோழியர் கமலம் திருமணம் நடைபெறும். தோழர்கள் மீசு இளமுருகு பொற்செல்வி, அம்பில் தர்மலிங்கம், ஜி. பராங்குசம், பி. எம். மாராச்சி, கண்ணிராசு, வெற்றிச் செல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

*   *   *

12—7—54 காலை 10 மணியளவில், சிதம்பரம் எண் 18, விளங்கியம்மன் கோவில் தெருவில், தோழியர் சிதாலட்சுமிக்கும்—தோழர் பக்தவத்சலனுக்கும் திருமணம் நடைபெறும்.

•   •   •

12—7—54 காலை 10-30 மணியளவில், சிவகாசி விஸ்வநத்தம் ரோடு, மணமகன் இல்லத்தில், சுவேவாணர் திரு. என். எம். கிருஷ்ணன் தலைமையில் கடிதத் தோழர் என். கே. கரிக்கோல் ராஜன்—தோழியர் பேச்சியம்மாள் திருமணம் நடைபெறும்.

டாக்டர் ஏ.எல்.முதலியார்

மீண்டும் துணை வேந்தராவார்

சென்னை, ஜூலை 9—

சென்னை சர்வகலாசாலை துணை வேந்தர் தேர்தலுக்கு டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் ஒருவரின் பெயர் மட்டுமே பிரேரிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் லட்சுமணசாமி முதலியார் தொடர்ச்சியாகப் போல் ஐந்தாவது தடவையாக இப்பொறுப்பை வகிப்பார்,

உலக அரங்கில்

சிங்கப்பூர் :

ஆசியாவில் கம்யூனிச எதிர்ப்புக்காக பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடையே நடைபெற்ற இரகசிய மாநாடு முடிவடைந்தது. அறிக்கை ஏதும் வெளியிடப்படவில்லை.

லண்டன் :

தனக்குப் பிறகு ஈடன்தான் பிரதமர் என்று, தன்வாரிசை ஒருவரை நியமிப்பதுபோல் சர்ச்சில் பேசினார் என்பதை சர்ச்சில் மறுத்திருப்பதுடன், வாரிசு நியமிப்பது தன் வேலை அல்ல வென்றும், அது அரசியின் அதிகாரத்துக்கு உட்பட்டதென்றும் கூறினார்.

*   *   *

மத்திய கிழக்கு கூட்டுப் பாதுகாப்பில் ஈரான் சேருவதை சோவியத் ரஷியா ஆட்சேபித்துள்ளது.

குவாடிமாலா :

ஐந்து பேர் கொண்ட குவாடிமாலா சர்க்கார், படையெடுப்புத் தலைவரான கார்லஸ் ஆர்மஸ் என்பவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது.

டெஹ்ரான் :

எண்ணெய்க் கிணறுகளின் நிர்வாகம் பற்றி ஈரானுக்கும், எண்ணெய்க் கம்பெனிக்கும் இடையே சில பிரச்சினைகளில் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதாம்!

ஹாங்காங் :

இந்தியப் பொருள்களுக்கு தென் கிழக்கு ஆசிய நாடுகளில் மார்க்கெட் காணச் சென்றிருக்கும் இந்திய வர்த்தகக் குழுவினர் ஹாங்காங்கில் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு பீகிங் செல்லுகிறார்கள் என்று தெரிகிறது.

சாலிஸ்பரி :

புலவேயா தொழிற் சங்கத்தின் செயலாளரும், நீக்ரோ இனத்தவருமான ரோனால்டு மாங்கோ என்பவருக்கு பிரிட்டன் செல்வதற்குப் பாஸ்போர்ட் கொடுக்க தென்ரொடீஷிய சர்க்கார் மறுத்துவிட்டது.

ரோம் :

யூகோஸ்லேவியாவுடன் ஒன்பது ஆண்டுகளாக நடைபெறும் 'டிரீஸ்டி' பற்றிய பேச்சுக்களில் முடிவு ஒன்றைச் செய்ய வேண்டியது அவசரமாகிறது என்று இத்தாலியின் வெளிநாட்டமைச்சர் அட்லியோ பிக்கோனி கூறினார்.

கான்சாஸ் நகரம் :

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன், மருத்துவ விடுதியிலிருந்து தன் வீடு சென்றார். இவர் சிகிச்சைக்காக ஜூன் 20-ந் தேதியன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

எம். எல். ஏ. கைது

அம்பாலா, ஜூலை 9—

சர்தார் சானன் சிங் தாட் என்ற கம்யூனிஸ்டு எம். எல். ஏ.-யும், மற்றும் மூவரும், 144 தடையையும் நாடக விழாக்களின் சட்டம் 176-வது பிரிவை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாலா மாவட்ட கிசான் சபையினர், ஜூலை 6-ல் நடைபெறும் தங்கள் கட்சி மாநாட்டில் நாடகம் ஒன்று நடத்த அம்பாலா மாவட்ட நீதிபதியிடம் அனுமதி கோரி இருந்தனர். நீதிபதி அனுமதி தர மறுத்து, 144 சட்டத்தை அமுல் செய்திருந்தார். அதை மீறி மேற்கண்ட தோழர்கள், "மாநாட்டில் கலை விழா" என்ற பெயரில் நாடகம் ஒன்றை நடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜாகர்த்தா :

இந்தோனேஷியாவில் சோவியத் தூதராக டிமிட்ரி ஜுகோவ் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் போர்க்காலத்தில் ரஷியத் தளபதியாக இருந்த மார்ஷல் ஜுகோவின் உறவினர் என்று தெரிகிறது.

லாகோஸ் :

நைஜீரியாவில் தற்போது கவர்னராக உள்ளவரையே நைஜீரிய கூட்டாட்சியின் கவர்னர்-ஜெனரலாக பிரிட்டிஷ் அரசி நியமித்திருக்கிறார். நைஜீரியாவின் அடுத்த மூன்று மாதங்களில் புதிய அரசியல் அமைப்பொன்று அமுல் செய்யப்பட இருக்கிறது.

மான்செஸ்டர் :

இந்திய பருத்தித் துணி இறக்குமதியால் லங்காஷயரின் துணி வியாபாரத்திற்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறதென்றும், உடனே லண்டன் சர்க்கார் இதில் தலையிட்டு இந்தியத் துணி இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷ் பருத்தி போர்டு, சர்க்காருக்கு அவசர வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கிறது.

பாரிஸ் :

பிரெஞ்சு பிரதமர் மென்டெஸ் பிரான்ஸ் ஜினிவா செல்வார் என்று தெரிகிறது. அங்கு சென்றதும், அவர், முதலில் சோவியத் வெளிநாட்டமைச்சர் மாலடோவைச் சந்திப்பார் என்று தெரிகிறது.

கான்பெர்ரா :

சீனுவுக்குச் சென்று திரும்பும் வழியில், பிரிட்டனின் முன்னாள் முதலமைச்சர் அட்லி, ஆஸ்திரேலியா வருவார் என்று ஆஸ்திரேலிய பிரதமர் மென்சிஸ் கூறினார். "நானும் அவரும் அரசியல் மாறுபாடு உடைய கொள்கை உடையவர்கள் என்றாலும், நாங்கள் சிறந்த நண்பர்கள்" என்று அவர் மேலும் கூறினார்.

ஹனோய் :

இன்னும் சில நாட்களில் வியட்மின் படைகள் ஹனோய் நகரைத் தாக்குமென்று தெரிகிறது. பிரெஞ்சுக்காரர்கள் ஹனோய் தாக்குதலைச் சமாளிப்பார்கள் என்று பிரெஞ்சுத் தளபதி கூறினார்.

வாஷிங்டன் :

சமாதான காலத்தில் வேவு பார்க்கும் ஒற்றர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்ற மசோதா அமெரிக்க கீழ் சட்டசபையில் நிறைவேறியது. இம்மசோதாவுக்கு எதிராக யாருமே வாக்களிக்கவில்லையாம்.

•   •   •

இனி, நிறத் தடைகளை நீக்கி விட்டு நீக்ரோ மாணவர்கள் உட்பட எல்லா மாணவர்களையும் அனுமதிக்கப் போவதாக, ஐ ஐ வாஷிங்டன் பல்கலைக் கழகம் அறிவித்திருக்கிறது.

*   *   *

தென்கிழக்கு ஆசிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கம்யூனிஸ்டு அல்லாத நாடுகள் அனைத்தும் சேருமென்று தான் எதிர்பார்ப்பதாக டல்லஸ் கூறினார். தாய்லாந்தும், பிலிப்பைனும் ஒப்பந்தத்தில் சேர தங்கள் ஒப்புதலைத் தெரிவித்து விட்டன என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சக தோழர் இரா.செழிஞ் செழியன், எம். ஏ., அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (93, ஆதிநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.